## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 3-2 - முந்நீர்ஞாலம்
## (ஆழ்வார் அழகரைத் தம் இந்திரியங்களின் குறையால் பூர்ணாநுபவம் பண்ண முடியாமல் வருந்த, எம்பெருமான் இவரது கலக்கத்தைத் தீர்த்தல்)

2908 * முந்நீர் ஞாலம் படைத்த * எம் முகில் வண்ணனே! *
அந்நாள் நீ தந்த * ஆக்கையின் வழி உழல்வேன் **
வெந்நாள் நோய் வீய * வினைகளை வேரறப் பாய்ந்து *
எந்நாள் யான் உன்னை * இனி வந்து கூடுவனே? 1

2909 வன்மா வையம் அளந்த * எம் வாமனா! * நின்
பன்மா மாயப் * பல்பிறவியில் படிகின்ற யான் **
தொன்மா வல்வினைத் * தொடர்களை முதலரிந்து *
நின்மா தாள் சேர்ந்து * நிற்பது எஞ்ஞான்று கொலோ? 2

2910 கொல்லா மாக்கோல் * கொலை செய்து பாரதப் போர் *
எல்லாச் சேனையும் * இருநிலத்து அவித்த எந்தாய்! **
பொல்லா ஆக்கையின் * புணர் வினை அறுக்கலறா *
சொல்லாய் யான் உன்னைச் * சார்வதோர் சூழ்ச்சியே 3

2911 சூழ்ச்சி ஞானச் * சுடரொளி ஆகி * என்றும்
ஏழ்ச்சிக் கேடின்றி * எங்ஙனும் நிறைந்த எந்தாய்! **
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து * நின் தாளிணைக் கீழ்
வாழ்ச்சி * யான் சேரும் வகை * அருளாய் வந்தே 4

2912 வந்தாய் போலே * வந்தும் என் மனத்தினை நீ *
சிந்தாமல் செய்யாய் * இதுவே இதுவாகில் **
கொந்தார் காயாவின் * கொழுமலர்த் திருநிறத்த
எந்தாய்! * யான் உன்னை * எங்கு வந்தணுகிற்பனே? 5

2913 கிற்பன் கில்லேன் * என்றிலன் முன நாளால் *
அற்ப சாரங்கள் * அவை சுவைத்து அகன்றொழிந்தேன் **
பற்பல்லாயிரம் * உயிர் செய்த பரமா! * நின்
நற்பொற்சோதித் தாள் * நணுகுவது எஞ்ஞான்றே? 6

2914 எஞ்ஞான்று நாம் இருந்திருந்து * இரங்கி நெஞ்சே! *
மெய்ஞ்ஞானம் இன்றி * வினையியல் பிறப்பழுந்தி **
எஞ்ஞான்றும் எங்கும் * ஒழிவற நிறைந்து நின்ற *
மெய்ஞ்ஞானச் சோதிக் * கண்ணனை மேவுதுமே 7

2915 மேவு துன்ப வினைகளை * விடுத்துமிலேன் *
ஓவுதல் இன்றி * உன் கழல் வணங்கிற்றிலேன் **

பாவுதொல் சீர்க் கண்ணா! * என் பரஞ்சுடரே! *
கூவுகின்றேன் காண்பான் * எங்கெய்தக் கூவுவனே? 8

2916 கூவிக் கூவிக் * கொடுவினைத் தூற்றுள் நின்று *
பாவியேன் பலகாலம் * வழி திகைத்து அலமர்கின்றேன் **
மேவி அன்று ஆநிரை காத்தவன் * உலகம் எல்லாம் *
தாவிய அம்மானை * எங்கு இனித் தலைப்பெய்வனே? 9

2917 தலைப்பெய் காலம் * நமன் தமர் பாசம் விட்டால் *
அலைப்பூண் உண்ணும் * அவ்வல்லல் எல்லாம் அகல **
கலைப்பல் ஞானத்து * என் கண்ணனைக் கண்டு கொண்டு *
நிலைப் பெற்று என் நெஞ்சம் பெற்றது * நீடுயிரே 10

2918 * உயிர்கள் எல்லா * உலகமும் உடையவனை *
குயில்கொள் சோலைத் * தென்குருகூர்ச் சடகோபன் **
செயிரில் சொல்லிசை மாலை * ஆயிரத்துள் இப்பத்தும் *
உயிரின் மேல் ஆக்கை * ஊனிடை ஒழிவிக்குமே 11

**அடிவரவு:** முந்நீர் வன்மா கொல்லா சூழ்ச்சி வந்தாய் கிற்பன் எஞ்ஞான்று
மேவு கூவி தலை உயிர்கள் ஒழிவில்